**தலைப்பு 8 – தேசிய பொலிஸ் ஆணைக்குழு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 கணக்காய்வு அபிப்பிராயம்**

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கம் தவிர நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலஞ்ச அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலஞ்ச அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய

விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆணைக்குழுவினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்குகளைத் சமர்ப்பித்தல்

ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் பின்வரும்இணைக்கக் கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) வருடாந்த நிதிக்கூற்றுக்கள் | | |
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவினால் பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) உப பிரிவின் பிரகாரம் தநிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் நிதிக்கூற்றுக்களுடன் விதிகள் மூலம் குறிப்பிடக் கூடிய காலப்பகுதிக்குள் அந் நிறுவனங்களின் செயலாற்றல் அறிக்கை யையும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அறிக்கையில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக எதிர்ப்பொன்று இல்லை |

#### 1.6.2 கணக்கீட்டு குறைபாடு

**(அ) பிரதான கணக்கீடு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றிதழ்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் இம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணிச் செல்வதற்கு வேண்டிய மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொனறு கணக்காய்விற்கு பிரகாரம் நடவடிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச மற்றும் மாவட்ட கணககாய்வு முகாமைத்துவ குழுக்களின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பராமரித்துச் செல்லல் தொடர்பாக தேவையான ஆலோசனை வழங்கப்பட வேண்டும். |
| (ii) | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக போதியளவு கணக்கு முறையொன்றையும் உள்ளகக் கணக்காய்வு முறைமையொன்றையும் பேணிச்செல்வதற்காக கடன் மற்றும் முற்பண பதிவேடுகள், கடன்பட்டோர் முற்பண பதிவேடு மற்றும் கடன்கொடுத்தோர் எழுதி கோவைப்படுத்த வேண்டியதுடன் மாதாந்தம் திணைக்கள பதிவேடுகள் திறைசேரிப் பதிவேடுகளுடன் இணங்கியதாக உறுதிப் படுத்தப்பட்டு இணக்கக் | அரச கணக்கு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முற்பணக் கணக்கு தொடர்பான கடன் மற்றும் முற்பணக் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முற்பணக் கணக்கின் வரவு செலவுகளை குறிக்கும் மாதாந்த திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களுடன் ஒப்பிடப்பட்டு மாதாந்தம் அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்து அதன் பிரதி யொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | | கூற்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென 2017.07.05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அவ்வாறு உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **முலதன செலவினம்** | | |
| 03 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,600,0000 மொத்த தேறிய ஏற்பாடுகளில் ரூபா 1,983,890 சேமிக்கப்பட்டிருந்தது. அச் சேமிப்புக்கள் 54 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது | நிதி ஏற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அன்னியச் செலாவணி விகிதம் அவ்வப்போது வேறுபடுவததால் பொருட் கொள்வனவிற்கு சமர்ப்பிக்கப்படும் கூறுவிலைகளுக்கு பொருட்களை வழங்கும் வழங்குனர்கள் தவறுதல் மற்றும் மூலதன தன்மையிலான செலவினம் இல்லாமை காரணங்களாகும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 செப்தம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றதிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த திகதியில் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதுடன் ஒரு மாதத்திற்குள் பூர்த்தி செய்யப்படும். |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

**(அ) பொதுமக்கள் முறைப்பாடுகளை தீர்வுசெய்தல் செயன்முன்னேற்றம் தன்மையின் பிரகாரம்**

2019 மார்ச் 08 ஆந் திகதி ஆணைக்குழு செயலாளரின் NPC/Fin/01/02/2019 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு 2018 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற பொதுமக்கள் முறைப்பாடுகள் மற்றும் அவற்றை புலனாய்வு செய்யும் செயன்முன்னேற்றம் தன்மையின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | முறைப்பாட்டின் தன்மையின் பிரகாரம் | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | தீர்வுசெய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | முறைப்பாடுகள் தீர்வின் சதவீதம்ன் எண்ணிக்கை | கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | தீர்வுசெய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | முறைப்பாடுகள் தீர்வின் சதவீதம்ன் எண்ணிக்கை |
| 1. | பொலிஸினால் நடவடிக்கை எடுக்கப்படாமை | 480 | 249 | 52 | 655 | 439 | 67 |
| 2. | தாக்குதல் | 33 | 13 | 39 | 30 | 20 | 67 |
| 3. | சித்திரவதை செய்தல் | 04 | - | - | 03 | 03 | 100 |
| 4. | அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்துதல் | 377 | 220 | 58 | 465 | 317 | 68 |
| 5. | பெண்களையும் சிறுவர்களையும் துன்புறுத்துதல் | 08 | 03 | 38 | 03 | 01 | 33 |
| 6. | சட்டரீதியற்ற வகையில் தடுத்து வைத்தல் | 45 | 37 | 82 | 26 | 14 | 54 |
| 7. | இலஞ்ச ஊழல் | 13 | 01 | 07 | 12 | 07 | 58 |
| 8. | பக்கச்சார்பு | 256 | 112 | 44 | 224 | 223 | 100 |
| 9. | பொய்க்குற்றம் சாட்டுதல் | 91 | 42 | 46 | 104 | 78 | 75 |
| 10 | பொலிஸ் கைது செய்த நிலையில் மரணம் ஏற்படல் | 03 | - | - | 02 | 02 | 100 |
| 11 | போதைப்பொருள் குற்றங்கள் | - | - | - | 29 | 16 | 55 |
| 12 | ஏனையவை | 156 | 79 | 51 | 98 | 70 | 71 |
| **13** | மொத்தம் | **1,466** | **756** | **51** | **1,651** | **1,190** | **72** |

மேற்படி தகவல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக முறைப்பாடுகளை தீர்வுசெய்யும் சதவீதம் 51 சதவீதம் முதல் 72 சதவீதம் வரை அதிகரித்திருந்த போதும் கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1,466 முதல் 1,651 வரை அதிகரித்திருந்தன. | பொலிஸ் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும் தவறுகளை குறைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆணைக்குழு தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் கரணமாக பொதுமக்கள் பொதுமக்கள் அறிந்து கொள்வதால் முறைப்பாடுகள் கூடியளவில் கிடைக்கப் பெறுகின்றன. |
| (ஆ) பொலிசாரினால் செயற்படாமை, அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் பொய் குற்றச்சாட்டுகளை தீர்வு செய்தல் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் அதிகரித்து காணப்பட்ட போதும் முறைப்பாடுகளை அறிக்கையிடல் அதிகரித்திருந்தது | பொலிஸ் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும் இந்ததவறுகளை குறைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முறைப்பாடுகள் கூடிய பெறுமதியொன்றாக அறிக்கையிடுவதற்கு யூ.என்.டீ.பீ. செயற்திட்டத்தின் கீழ் அறிவூட்டுவதே இதற்கான காரணமாகும். |
| (இ) சட்டவிரோதமாக தடுத்து வைப்பது தொடர்பாக முறைப்பாடுகளை தீர்வுசெய்தல் சதவீதம் 84 இலிருந்து 54 சதவீதம் வரை குறைவடைதிருந்தது. | இந்த முறைப்பாடுகளை தீர்வு செய்வதற்காக செயற்திறனான வேலைத்திட்டமொன்றை ஈடுபடுத்த வேண்டும் | இந்த முறைப்பாடுகளை தீர்வு செய்யும் சதவீதம் குறைவதற்கு காரணம் பொலிஸ் உத்தியோகத்தர்களை மேற்பார்வை செய்வது பொலிஸ் ஆணைக்குழுவாலே என அவர்கள் அறிந்து வைத்துள்ளதாலும் கைது செய்யப்பட்ட நபர்கள் சட்டரீதியான பிடிக்குள் நீதிமன்றத்திற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |

**(ஆ) பொதுமக்கள் முறைப்பாடுகளை தீர்வுசெய்தல் செயன்முன்னேற்றம் தன்மையின் பிரகாரம்**

2019 மார்ச் 08 ஆந் திகதி ஆணைக்குழு செயலாளரின் NPC/Fin/01/02/2019 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு 2018 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற பொதுமக்கள் முறைப்பாடுகள் மற்றும் அவற்றை புலனாய்வு செய்யும் செயன்முன்னேற்றம் தன்மையின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

பிரதேசம் **2018** ஆண்டில் பூர்த்தி புலனாய்வு

| | கிடைத்த முறைப்பாடுகள் எண்ணிக்கை | செய்யப்பட்ட புலனாய்வுகளின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட சதவீதம் |
|---|---|---|---|
| தலைமை அலுவலகம் | 111 | 75 | 68 |
| மாகாண அலுவலகம் | | | |
| மேல் | 494 | 339 | 68 |
| மத்திய | 161 | 109 | 68 |
| வடமேல் | 172 | 154 | 90 |
| தென் | 179 | 138 | 77 |
| வடமத்திய | 86 | 70 | 81 |
| ஊவா | 116 | 93 | 80 |
| சப்ரகமுவ | 90 | 52 | 58 |
| வட | 65 | 56 | 86 |
| கிழக்கு | 177 | 104 | 58 |
| **மொத்தம்** | **1,651** | **1,190** | **72** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கூடுதலான முறைப்பாடுகள் கிடைக்கும் மேல் மாகாணத்தின் அலுவலகத்திற்கு கிடைத்த முறைப்பாடுகளில் 32 சதவீதமான அதாவது 155 தீர்வுசெய்வதற்கு எஞ்சியிருந்தன | கூடுதலான முறைப்பாடுகள் கிடைக்கும் அலுவலகங்களின் முறைப்பாடுகளை தீர்வு செய்வதற்கு கூடிய கவனம் செலுத்த வேண்டும். | 2019 மே மாதம் வரை 94 சதவீதம் தீர்வுசெய்யப்பட்டுள்ளன. |
| (ஆ) சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாண அலுவலகங்களின் முறைப்பாடுகளில் தீர்வு செய்தல் 58 சதவீதமான குறைந்த அளவில் காணப்பட்டது. | முறைப்பாடுகளை தீர்வுசெய்தல் முறையாக மேற்கொள்வதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று தொடரச்சியாக செயற்படுத்த வேண்டும். | 2019 மே 30 ஆந் திகதி வரை சப்ரகமுவ அவுலகத்தின் 86 சதவீதமும் மற்றும் கிழக்கு அலுவலகத்தின் முறைப்பாடுகளில் 84 சதவீதம் தீர்வு செய்யப்பட்டுள்ளன. கிழக்கு அலுவலகத்தின் முறைப்பாடுகளில் தீர்வு தேவையான பொலிஸ் அறிக்கைகளை துரிதமாக பெற்றுத்தருமாறு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

**(இ) ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை பொலிஸ் சேவையின் சீருடை செயற்பாட்டு பதவியணியினரில் | எஞ்சிய பதவிகளுக்காக | 07 பதவிகளுக்காக அங்கீகாரம் |

| | | |
|---|---|---|
| 06 பதவிகளில் பொலிஸ் கொஸ்தாபல், சாரதி பதவியும் உதவியாளர் சேவையின் 104 பதவிகளில் 06 பதவிகளிற்கு அங்கீகாரம் வழங்கப்படாமல் எஞ்சியிருந்தன. | ஆட்சேர்ப்பு நடைமுறை கோவையை விரைவில் அங்கீகரித்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வழங்கப்பட்டுள்ளது. |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2019 மார்ச் 17 ஆந் திகதிக்கு முனன்ர் அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதித்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த திகதியில பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட வேண்டும். | யூன் மாதம் முடிவடைவதற்கு முன்னர் மெய்மையாய்வு நடவடிக்கைளை பூர்த்தி செய்யுமாறு பொருள் மெய்மையாய்வுக் குழுவிற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவிற்காக உள்ளக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்படாமையால் மீளாய்வாண்டில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 40 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொழிப்பறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயத்திற்கு எதிர்ப்பொன்று இல்லை. |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

ஆணைக்குழுவின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன. ஆணைக்குழுவினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 70.39 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| ஆளணி வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 18 | 14 | 04 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 62 | 57 | 05 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 21 | 18 | 03 |
| | | 14 | 13 | 01 |
| | **மொத்தம்** | **119** | **104** | **15** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் 14 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களுக்கான பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணப்படும் வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை பெற்றுத் தருமாறு நியமன அதிகாரியிடம் கோரப்பட்டுள்ளது. |
| (ஆ) மேல்மாகாணம் தவிர ஏனைய 08 மாகாணங்களில் 16 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவை புரிவதுடன் 08 மாகாண பணிப்பாளர்களுக்கு (ஒப்பந்தம்) மேலதிகமாக 04 புலனாய்வு உத்தியோகத்தர்கள், 02 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் 02 முகாமைத்துவ உதவியாளர்கள் உத்தியோகத்தர்கள் சேவை புரிகின்றனர். மாகாண அலுவலகங்களுக்காக கிடைக்கும் முறைப்பாடுகளை புலனாய்வு செய்வதற்காக அனுபவமுள்ள புலனாய்வுக்குழு அந்த அலுவலகங்களில் சேவையில் ஈடுபடுத்த வேண்டிய போதும் | மாகாண அலுவலகங்களுக்கு புலனாய்வு உத்தியோகத்தர்கள், இணைக்கப்பட வேண்டும் | புலனாய்வு உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்கள் மாகாண அலுவலகங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மேல் மாகாணம் / பிரதான அலுவலகத்தில் 07 புலனாய்வு உத்தியோகத்தர்கள், 38 அரச முகாமைத்துவ உதவியாளர்கள் 12 அலுலக ஊழியர்கள் உட்பட 88 பேர் சேவையில் ஈடுபட்டிருந்த போதும் பிராந்திய சேவைகள் வழங்கும் போது பதவியணியினர் பகிர்வில் வேறுபாடொன்று காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | ஆணைக்குழுவிலன் பிரிவுகளுக்கு இடையே உத்தியோகத்தர்கள் பகிர்வில் வேறுபாட்டை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேல் மாகாணம் / பிரதான அலுவலகத்தில் பொது மக்கள் முறைப்பாடுகளை புலலனாய்வு செய்வதற்காக 17 உத்தியோகததர்கள் சேவையில் ஈடபட்டிருந்ததுடன் ஏனைய உத்தியோகத்தர்கள் பொது மக்கள் புலனாய்வ தவிர ஏனைய ஆணைக்குழுவிற்கு கையளிக்கபட்டுள்ள செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். |